2004 ஜூலை 28]

செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 55, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

55—

மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிகள்

***38284—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் தொடங்குவதில், மாசுக் கட்டுப்பாடு வாரியம் விதித்துள்ள நடைமுறைகளைத் தளர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களைக் காப்பாற்றுகின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உள்ளது. கடந்த கால தி.மு.க. அரசு சிறுதொழில்களைத் தொடங்கும்போது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாகக் கடுமையான விதிகளை விதித்து வந்துள்ளது. குறிப்பாக, Sago Factory, Milk Dairy, Foundry போன்ற சிறுதொழில்களைத் தொடங்க வேண்டும் என்றால், ஓடை, ஆறுகளுக்கு 5 கி.மீ. தூரத்திற்கு அப்பால்தான் தொடங்கவேண்டும் என்று விதிகள் உள்ளதாகத் தெரிகிறது. தற்போது மாசுக் கட்டுப்பாடு வாரியம், treatment plant — சுத்திகரிப்பு நிலையம் அமைத்த பிறகே, உரிமம் கொடுத்து வருகிறார்கள். சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் சுத்தப்படுத்தப்பட்ட பிறகு மாசு கிடையாது.*

அப்படியிருக்கும்போது, தொழிற்சாலைகளை 5 கி.மீ. தூரத்திற்கு அப்பால்தான் அமைக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதிகமாக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்மீது, பொது மக்களைப் பாதிக்காதவண்ணம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 5 கி.மீ., ஆற்றிற்கு அருகில் அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் எதுவும் நிறுவக்கூடாது என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. உதாரணத்திற்கு, திருப்பூரில் பொது மக்கள் வழக்குத் தொடர்ந்து, ஆறு மாசுபட்டதற்கு 12 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையை திருப்பூர் சாயத் தொழிற்சாலை அதிபர்கள் கொடுக்கவேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான், அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11—00

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்து கிலோ மீட்டர் தூரம் என்ற தொழிற்சாலைகள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. வெங்கடாஜலம்: குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால் foundry தொழிலுக்கும் ஓடைக்கும் என்ன சம்பந்தம் என்பதே தெரியவில்லை. அப்படி இருக்கின்றபட்சத்தில் அவர்கள் foundry தொழிலை அமைக்க வேண்டுமென்றால் ஐந்து கிலோ மீட்டர் தூரம் ஓடைக்கு அப்பால் அல்லது அந்த ஆறுகளுக்கு அப்பால் இருக்க வேண்டுமென்ற அந்த விதியை உருவாக்கியிருக்கின்றார்கள். எனவே, இதையெல்லாம் அரசு அறியுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

2004 ஜூலை 28]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் நிறையத் தொழிற்சாலைகள் நீரைச் சுத்திகரிப்பு செய்து வெளியேவிடாமல், நேராக ஆற்றில் விட்டுவிடுவதால் நிலத்தடி நீர் மாசுபடுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். நிலமும் பாதிக்கப்படுகிறது. இதை மனதில் வைத்துத்தான் அரசு அந்த ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் மிகவும் மாசுபடுத்துகின்ற தொழிற்சாலைகளை அமைக்க ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எஞ்சிய கேள்விகள் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(பட்டியல்கள் 8 முதல் 10 வரை)

பட்டியல் 8

1—

மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம்

வினா எண் 44559—திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள 24 வார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய தென்பாதி பகுதியில் மற்றொரு மண்ணெண்ணெய் பங்க் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.